இன்றைக்கு அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆகவே தான், கூடுமான மட்டும் அவர்களோடு பேசி, இதைத் தீர்க்க வேண்டுமென்று அரசு விரும்புகிறது. என்றாலும், மத்திய அரசின் அனுமதி பெற்று சட்டத்தை அமுல்படுத்துவது என்பதை இந்த அரசு ஆலோசனை செய்து கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்பு எண் 4. (குறுக்கீடு.) அண்ணாமலை அவர்கள் மட்டும் கேட்டால் போதும் என்று திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் அஷ்ஷூரன்ஸ் கொடுத்ததினால், இந்தத் தீர்மானம் சேர்க்கப்பட்டது. திரு. அண்ணாமலை.

(ஈ) தர்மபுரி, காவேரி ரப்பர் தொழிற்சாலை, கதவடைப்பு, குறித்து.

திரு. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

''தர்மபுரி, காவேரி ரப்பர் தொழிற்சாலை நிர்வாகம், அடிக்கடி கதவடைப்பு செய்வதாலும், தற்போது அறுபது தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்துள்ளதாலும், அவர்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து''.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்றினை அவைமுன் வைக்க அனுமதி கோருகிறேன்.

தர்மபுரி மாவட்டம், நல்லாம்பட்டியிலுள்ள காவேரி ரப்பர் பாக்டரி 9—3—1977 முதல் இயங்கி வருகிறது. இத்தொழிற்சாலையில் சி. ஐ. டி. யு. உடன் இணைக்கப்பட்ட தர்மபுரி மாவட்டம், காவேரி ரப்பர் தொழிலாளர் சங்கத்தைச் சார்ந்த 135 தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். சைக்கிள் டயரும் ட்யூப்களும் இந்த தொழிற்சாலையில் தயாரிக்கப் படுகின்றன. சி. ஐ. டி. யூ.–உடன் இணைக்கப்பட்ட மேற்கண்ட தொழிற்சங்கம் ஒன்றுதான் இந்த நிறுவனத்தில் இயங்கி வருகிறது.

தொழிற்சங்கம் தனது 12—1—1979 ஆம் தேதி கடிதம் மூலம் கீழ்க்கண்ட கோரிக்கைகளை எழுப்பி, அதை நிவர்த்தி செய்து தருமாறு நிர்வாகததை கேட்டுக் கொண்டுள்ளது:—

கோரிக்கைகள் விவரம்—

1. 90 நாட்களுக்கு மேற்பட்டு பணிபுரிந்த அனைவரும் நிரந்தரமாக்கப்பட வேண்டும்.

1979 ஏப்ரல் 30] [திரு. எஸ். இராகவானந்தம்

2. தற்பொழுதுள்ள சம்பள விகிதாச்சாரத்தில் 75 சதவிகிதம் சம்பள உயர்வாக தரப்பட வேண்டும்.

3. 1976--77 ஆம் வருடத்திற்கான போனஸாக 15 சதவீதம் தரப்பட வேண்டும்.

4. வெப்பப்படியாக 0.50 பைசா வீதம் நாள் ஒன்றுக்கும், இரவு நேரம் வேலைப் படியாக ரூ. 1-ம் தரப்பட வேண்டும்.

5. மிகை நேர வேலைக்கு இரட்டிப்பு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

மேலே சொன்ன கோரிக்கைகள் அல்லாது, நிர்வாகம் தற்பொழுதுள்ள மருத்துவ வசதிகளை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டார்கள்.

தொழிலாளர்கள் சார்பில் எழுப்பப்பட்ட இந்த பல்வேறு கோரிக்கைகள் தொழிலாளர் அலுவலர் 'வேலூர்' அவர்களினால் 30—1—1979 அன்று பெறப்பட்டு பேச்சு வார்த்தைகள் மேற் கொள்ளப்பட்டு உள்ளது.

தொழிலாளர் பிரதிநிதிகள், நிர்வாகம் 50 தொழிலாளர் களை வாய்மொழியாக வேலை நீக்கம் செய்து விட்டது என்றும், தொழிலாளர் அலுவலரிடம் புகார் செய்துள்ளார்கள். திடீர் என்றும் தகுந்த முகாந்திரம் எதுவும் இன்றியும், மேற்கண்ட தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப் பட்டுள்ளார்கள் என்றும் சொல்லப்பட்டது. தொழிற்சங்க பிரதிநிதிகளின் இந்த கூற்றுக்கு எதிராக, நிர்வாகம் தனது 24—3—1979 ஆம் தேதி கடிதத்தில், தாங்கள் 4 வேலையாட்களை மட்டுமே அவர்களின் மீதான குற்றச்சாட்டுகள் காரணமாக வேலையில் இருந்து நீக்கி உள்ளதாக தெரிவித்தனர். வேலை நீக்கம் செய்யப்பட்டதாக கூறப்பட்ட 50 தொழிலாளர்களின் பெயர் விவரங்களை தொழிற்சங்க பிரதிநிதிகள் தரவில்லை.

நிறுவனம் சுமுகமான முறையில் இயங்கிக்கொண்டு வருவதாகவும் தொழிலாளர்கள் எவ்வித நேரடி நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என்றும் தெரியவருகிறது. தொழிலாளர் நலத் துறைக்கு, அடிக்கடி கதவடைப்பு மற்றும் லே-ஆப் செய்யப் படுவதாக கூறுகின்ற புகார் எதுவும் தொழிலாளர்களால் சமர்ப்பிக்கப்படவில்லை.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, அந்தத் தொழிலாளர்கள் பிரச்னை தற்போது லேபர் ஆபீசர் மூலம் தீர்க்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அரசு எடுத்த

நடவடிக்கைக்கு நன்றி. ஆனால், இரண்டு தொழிலாளர்கள் வேண்டுமென்றே பழிவாங்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு, சுப்பிரமணியம், கருப்பண்ணன் என்னும் இரண்டு தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கை நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்பது; மற்றொன்று, பொங்கல் அட்வான்ஸ் கொடுப்பது பற்றி. இந்தப் பிரச்னைகளை சுமுகமாகப் பேசி தீர்த்திருக்கலாம். ஆகவே, இதை ஒரு அணுகு முறையிலே கேட்காமல், குற்றப் பார்வையோடு பார்த்ததால் தான், இந்தக் கதவடைப்பு அங்கே ஏற்பட்டது. இத்தகைய போக்கு ஒரு ஆரம்பத் தொழிற்சாலையிலே இருக்கிறது. இந்தப்போக்கை கடைப்பிடிப்பதைக் குறித்து, அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதோடு, இரண்டு தொழிலாளர்களுக்கும் வேலை கிடைப்பதற்கான ஒரு ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு பேர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பதாக உறுப்பினர் குறிப்பிட்டார்கள். எனக்கு கிடைத்திருக்கின்ற குறிப்பில் 4 பேர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே, இதைப்பற்றி சமரசப் பேச்சு நடந்து கொண்டிருக்கிறது. மேலும், வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் 2 (ஏ) பெடிஷனை லேபர் ஆபீசருக்கு அனுப்புவார்கள் என்றால், தொடர்ந்து சமரச முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றையதினம் திரு. வி. கே. கோதண்டராமன் பெயர் இல்லை. எல்லோர் பெயரையும் அறிவித்து விடுகிறேன். இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு திரு. ஏம். அண்ணாமலை, திரு. ரா. கிருஷ்ணன், திரு. வி. கே. கோதண்டராமன், திரு. பி. சொரணம், திரு. வெங்கிடு, டாக்டர் கே. சமரசம் ஆகியோர் கொடுத்திருக்கிறார்கள். திரு. வி. கே. கோதண்டராமன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இந்த அறிக்கையிலே அந்த காவேரி ரப்பர் தொழிற்சாலையிலே 135 தொழிலாளர்கள் வேலை செய்வதாகவும், அங்கே அந்தத் தொழிலாளர்கள் நம்பியிருக்கக் கூடிய தொழிற்சங்கம் சி. ஐ. டி. யு. என்றும் சொல்கிறார்கள், ஆகவே, அவர்கள் சில பல கோரிக்கைகளை வைத்திருப்பதாகவும், அந்தக் கோரிக்கைகளை தீர்த்து வைப்பதற்குப் பதிலாக, அந்த நிர்வாகம் 50, 60 தொழிலாளர்களை வேலையிலிருந்து திடீரென்று எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல் நீக்கியிருக்கிறது. ஆனால், இப்போது காரணம் சொல்கிறார்கள். அவர்கள் சில தவறுகள் செய்

திருப்பதாகக் கூறுகிற நிலையிருக்கிறது. எனவே, கனம் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தயவுசெய்து, சி.ஐ.டி.யு. தொழிற்சங்கம் என்கிற காரணத்திற்காக பழி வாங்காமல், அந்தத் தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு ஏற்றுக்கொள்ள அமைச்சர் அவர்கள் இதற்கு உடந்தையாக இருக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையில், உடனடியாக இதைத் தீர்க்கக் கூடிய வகையில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே. நான் ஏற்கனவே சொன்னதுபோல் 4 பேர்கள் தான் வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள்மீது குற்றம் சாட்டப்பட்டு, வேலைநீக்கம் செய்தி ருப்பதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது. 50 தொழிலாளர்கள் வேலைநீக்கம் பற்றிய விவரங்கள் தொழிற்சங்கப் பிரதிநிதியால் இன்னும் தரப்படவில்லை. அங்கே ஒரே ஒரு சங்கம் தான் இருக்கிறது என்பது பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். போட்டிச் சங்கம் ஏற்பட வேண்டியதில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த 50 தொழிலாளர்களின் முழு விவரங்களை, லேபர் ஆபீசருக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

## (உ) புளியங்குடி நகர விசைத்தறி நெசவாளர்கள் உண்ணா விரதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ஆர். கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் ஆகியோர் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

திரு. ஆர். கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, புளியங்குடி நகரத்திலுள்ள விசைத்தறி நெசவாளர்களைப் பழி வாங்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ள ஒருசில விசைத்தறி நிலைய முதலாளிகளது போக்கை எதிர்த்து தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருப்பதால் நிலவும் பதட்ட நிலை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்றினை அவையின் முன் வைக்க அனுமதி கோருகிறேன்.